
# அஸ்வினி நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ அஸ்வினி சக்தி**

பரசுகம், தன்மயம், சச்சிதானந்தம்

மெய்பரம ஏகாந்த நிலையம்

**3. திருப்பாவைபாசுரம் சக்தி – 20 அஸ்வினி இயல்பு**

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று

கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்

செப்பமுடையாய்! திறலுடையாய் செற்றார்க்கு

வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்

செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்

நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்

உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை

இப்போதே எம்மைநீ ராட்டே லோர் ரெம்பாவாய்

**Video Link : https://youtu.be/lMeMLglNkPs**

**விளக்கம் :**

உக்கமும், தட்டொளியும் உலகிலேயே தேடலின் ரகசிய வழிமுறை என்று பறை சாற்றுவதே அஸ்வினி நட்சத்திரத்தின் தனித்தன்மையாகும்.

உக்கம் என்றால் பரசுகமளிக்கும் பிராணனை நோக்கும் வாயுகலையை விசிறியாக பாசுரத்தில் காட்டப் பெற்றுள்ளது.

தன்மயத்தை தட்டொளியென்றே (MIRRORING) சச்சிதானந்த நிலையை அறிய முற்படும் அஸ்வினி வாழ்வியல் பாராட்டுக்குரியது.

தன்மயம் என்பது கணவன், மனைவி, உற்றார், உறவினர் சுற்றமும், நட்பு எவருமின்றி, யாருடைய துணையுமின்றி, தனக்குத் தானே ஆனந்தமாக இருப்பது தட்டொளியால் மட்டுமே சாத்தியமாகும். இந்த கண்ணாடி பயிற்சியில் ஆரம்பித்து தன்னுள்ளே சத்தியத்தை சத்தாக, சித்தாக, ஆனந்தமாக முழுமையில் சச்சிதானந்தமாக உடலில் காணும் செல்வ முடையாய், திறனுடையாய், வெப்பமுடையாய், அஸ்வினியாகும்.

இந்த ஏகாந்த நிலையத்தை, மெய்பரம சுகத்தை கொண்ட அஸ்வினி நக்ஷத்ரதாரர்கள் எந்த இடையூறுகளையும், இன்னல்களையும் எதிர் கொள்ளும் நிவாரணத் தன்மை கொண்டவர்களாவார்கள்.

எனவே, புறமருத்துவம் இவர்களுக்கு தேவையில்லை. அக மருத்துவத்தின் துணையுடன் அகம் ப்ரம்மாஸ்மியாக மேலும் அகம் ஸ்மராமியாக (HEALING) விளங்கும்.

முப்பத்து மூவருக்கும் பலப்பல வழிகள் முன்னால் சென்றாலும், கப்பம் தவிர்க்கும் வழி உனக்கு மட்டுமே தெரியும்.

நேர்மையும், திறமையும் உடைய காந்த சக்தி, ஏகாந்தமாய் பல்கி பரவி உன்னில் வெளிப்படுவதால் உனது உடல், உள்ளம், உயிர் அனைத்தும் ஒரு விதமான தெய்வத்தன்மையை வெளிப்படுத்தும். எனவே இந்த தேஜஸை சொல்லவே நீ வெப்பம் கொடுக்கும் விமலனானாய்.

சத்தியம், சித்தியம், ஆனந்தம் இவை மூன்றும் நப்பின்னைக்கே சொந்தம். மெல்லிடை, மேலாடை, சிறுவண்ணம் கொண்ட சுயம்பு தன்மயமே நினது சுகம் மயமாகும். இந்த சுய பிரகாசத்தை காணவே கண்ணாடி பயிற்சி.

அகம் பிரம்மாஸ்மியமாக பரசுகம் காணும் நுணுக்கம் உனக்கு மட்டுமே சாத்தியமாகும்.

எனவே விசிறியும், கண்ணாடியும் சுகத்தை மேம்படுத்த இறைவன் மணாளனாக உன்னைத் தேடிவருகிறார். இந்த மெய்ப் பரம ஏகாந்த நிலையம் உலகம் உள்ளவரை உனக்கே சொந்தம். அஸ்வினியே வருக. அஸ்வினியே அருள்க!

## 4. வேதத்தில் அஸ்வினி ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

ஸ்வேதவர்ண்யை வித்மஹே
சுதாகராயை தீமஹி
ஸ்வயமே ப்ரஸ்வை தீமஹி
தன்னோ அஸ்வினி ப்ரசோதயாத்

பரசுகமே ஆனந்தமே
சிதானந்தமே மெய்ப்பொருளே
ஏகாந்தமே நல் சத்தியமே
ஏற்ற துதியே நமோ நமோ

இணைந்த உருவே இயல்வடிவே
நினைந்த தட்டொளி ஊக்கமே
ஈருடல் கொண்ட தாரகையே
தன்மய அஸ்வினி நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. அஸ்வினி கவிதை

தன்மயமாதல் உனக்கியல்பு

ஆனந்தமே அதன் விளைவு

சத் – சித் – ஆனந்தமே உன் இசைவு

மெய்ப்பரம ஏகாந்தமே அதன் விளைவு

பரசுகமே நிலைப்பாடு; தன் சுகமே பக்க விளைவு

நடம் புரியும் வழிபாடு கற்பித்தலே அளவு

அன்புடன் கருணை பொழிய அசுபதி பாசம்

ஆடம்பரமே, ஆசிரியரே, மருத்துவரே போற்றி

மெய்சுகம் யாதெனில், நிரந்தர அழகி நீயே

இயல்பான நிவாரணம் நினக்கழகு

இறைவா அழகு மெய்யழகே யெனில்

அதை உன்னில் காணவே மெய்பரம

ஏகாந்த நிலையமாய் பெற்றாய் நீ வாழ்க

தட்டொளி தானே? கண்ணாடி பயிற்சி

அது என்னாளுமே உனக்கெனவே மலர்ச்சி

பட்டொளி தானே? படபடவென வளர்ச்சி

இது உனக்கெனவே மற்றவர்க்கு தரும் கவர்ச்சி

வட்டொளி தானே? வந்ததென வரவிருக்கும் கழற்சி

வர வர இதுவே நோய் தீர்க்கும் மட்டற்ற மகிழ்ச்சி

நட்டொளி தானே? நடுநாயகத்தில் நீதரும் அழற்சி

அயர்ந்தாலும் பெயர்ந்தாலும் மறைந்தாலும் இதுவே கழற்சி

## 6. அபிராமி அந்தாதியில் அஸ்வினி சக்தி

**ஞானமும் நல்வித்தையும் பெற**

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்

மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை

துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன

விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

**பிரிந்தவர் ஒன்று சேர**

துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்

பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்

கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்

அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.

**குடும்பக் கவலையிலிருந்து விடுபட**

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு

செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவேிப்

பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்

மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

**உயர் பதவிகளை அடைய**

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி

குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்

பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த

புனிதரும் நீயும் என்புந்தி  எந்நாளும் பொருந்துகவே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் அஸ்வினி சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் விஸ்வஸ்மை நம | – வையகமே போற்றி |
| ஓம் விஷ்ணவே நம | – விஷ்ணுவே போற்றி |
| ஓம் வஷட்காராய நம | – வசுக்களே போற்றி |
| ஓம் பூதபவ்ய பவத்ப்ரபவே நம | – முக்காலம் உணர்ந்தவளே போற்றி |
| ஓம் பூதக்ருதே நம | – ஆக்கலும், அழித்தலும் நீயே போற்றி |
| ஓம் பூதப்ருதே நம | – காத்தலும், பார்த்தலும் நீயே போற்றி |
| ஓம் பாவாய நம | – உலக நாயகனே போற்றி |
| ஓம் பூதாத்மநே நம | – பர பிரம்மமே போற்றி |
| ஓம் பூதபாவநாய நம | – கருவும், கர்த்தாவும் நீயே போற்றி |
| ஓம் பூதாத்மநே நம | – களங்கமற்றவனே போற்றி |
| ஓம் பரமாத்மநே நம | – பரமாத்மாவே போற்றி |
| ஓம் முக்தாநாம் பரமாகதயே நம | – முக்தி நாதனே போற்றி |
| ஓம் அவ்யயாய நம | – அழிவில்லாதவனே போற்றி |
| ஓம் புருஷாய நம | – புருஷோத்தமனே போற்றி |
| ஓம் ஸாக்ஷிணே நம | – அனைத்துக்கும் சாட்சியே போற்றி |
| ஓம் க்ஷேத்ரஜ்ஞாய நம | – உடல் களமே போற்றி |
| ஓம் அக்ஷராய நம | – கடைநிலை இல்லாதவனே போற்றி |
| ஓம் யோகாய நம | – யோகியே போற்றி |
| ஓம் யோகவிதாம்– நேத்ரே நம | – யோக தாதாவே போற்றி |
| ஓம் ப்ரதாந – புருஷேஸ்வராய நம | – ஜீவர்களின் நாயகனே போற்றி |
| ஓம் நாராஸிம்ஹவபுஷே நம | – நரசிம்மமே போற்றி |
| ஓம் ஸ்ரீமதே நம | – ஸ்ரீநிவானே போற்றி |
| ஓம் கேஸவாய நம | – கேசவனே போற்றி |
| ஓம் புரு ஷாத்தமாய நம | – புருஷோத்தமனே போற்றி |
| ஓம் ஸர்வஸ்மை நம | – பிரபஞ்சமே போற்றி |

| | |
|---|---|
| ஓம் ஸர்வாய நம | – நிர்மால்யமே போற்றி |
| ஓம் ஸிவாய நம | – சிவாய போற்றி |
| ஓம் ஸ்தாணவே நம | – லிங்கோத்பவாய போற்றி |
| ஓம் பூதாதயே நம | – கருவின் மூலமே போற்றி |
| ஓம் நிதயே – அவ்யயாய நம | – மாற்றமில்லாத மாற்றமே போற்றி |
| ஓம் ஸம்பவாய நம | – சம்பவ அவதாரமே போற்றி |
| ஓம் பாவநாய நம | – இன்ப சம்பவமே போற்றி |
| ஓம் பர்த்ரே நம | – துணைக்கோலே போற்றி |
| ஓம் ப்ரபவாய நம | – பிரபாவமே போற்றி |
| ஓம் ப்ரபவே நம | – பிரபுவே போற்றி |
| ஓம் ஈஸ்வராய நம | – ஈஸ்வரனே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அஸ்வினி சக்தி

ஓம் ஸ்ரீமாதா ஸ்ரீமஹாராஜ்ஸ்ரீ ஸ்ரீமத்ஸிம்ஹாஸனேச்வரீ
சிதக்னி – குண்ட – ஸம்பூதா தேவகார்ய ஸமுத்யதா

உத்யத்பானு – ஸஹஸ்ராபா சதுர்பாஹு – ஸமன்விதா
ராகஸ்வரூப – பாசாட்யா க்ரோதாகாரங்குசோஜ்வலா

மனோரூபேஹு – கோதண்டா பஞ்ச – தன்மாத்ர – ஸாயகா
நிஜாருண – ப்ரபாபூர – மஜ்ஜத் – ப்ரஷ்மாண்ட – மண்டலா

சம்பகாசோக – புந்நாக – ஸௌகந்திக – லஸத் – கசா
குருவிந்தமணி – ச்ரேணீ – கனத் – கோடீர – மண்டிதா

அஷ்டமீசந்த்ர – விப்ராஜ – தளிகஸ்தலசோபிதா
முகசந்த்ர – களங்காப – ம்ருகநாபி விசேஷகா

வதனஸ்மர – மாங்கல்ய – க்ருஹதோரண – சில்லிகா
வக்த்ர – லஷ்மீ – பரீவாஹ – சலன் – மீனாப – லோசனா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் அஸ்வினி சக்தி

ஸ்கந்தா சரணம்; ஸ்கந்தா சரணம்

சரவணபவ குஹா சரணம் சரணம்

குருகுஹா சரணம்; குருபரா சரணம்

சரணமடைந்திட்டேன் ஸ்கந்தா சரணம்

தனைந் தானறிந்து நான் தன்மயமாகிடவே

ஸ்கந்கிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே

தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்

அவதூத ஸந்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்

அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே

அறம் பொருளின்பம் வீடுமே தந்தருள்வாய்

தந்திடுவாய் வரம்தனை ஸ்கந்தகுரு நாதா

சண்முகா சரணம் சரணம் சரணம் ஸ்கந்தகுரோ

காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா

போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா

போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி

போற்றி போற்றி முருகா போற்றி

அறுமுகா போற்றி; அருட்பதம் அருள்வாய்

தகப்பன் சாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்

ஸ்வாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**10. கந்தர் அநுபூதி அஸ்வினி சக்தி**

ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்

பாடும் பணியே பணியா அருள்வாய்

தேடும் கயமா முகனைச் செருவில்

சாடும் தனி யானைச் சகோதரனே.(1)

உல்லாச, நிராகுல, யோக இதச்

சல்லாப, விநோதனும் நீ அலையோ?

எல்லாம் அற, என்னை இழந்த நலம்

சொல்லாய், முருகா சுரபூ பதியே.(2)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் அஸ்வினி சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| கனகாங்கி | ரத்னாங்கி | ரத்னாங்கி | கானமூர்த்தி |

**12. மூலமந்திரம்**

ஞானானந்ததமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதம்

ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவர் உபாஸ்மஹே

**13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| எட்டி | எருக்கு | கடம்பு | தேமா |

**14. பரிகாரம்**

- மருந்துகள் தானம் செய்யவும்.
- சூரியன் பின்னணியில் இரு குதிரைகள் இருக்குமாறு படம் வாங்கி வைக்கவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- ஆலயம் செல்லும் நேரம் காலை : 08.00 - 08.45 மணிக்கு சென்று வழிபடவும்
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் கோயில்,** திருத்துறைப்பூண்டி - திருவாரூர்.


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra